# உங்கள் ஹெபடைடிஸ் B பரிசோதனையின் முடிவுகளைப் பற்றி புரிந்துகொள்ளுதல்*



**ஹெபடைடிஸ் B இரத்தப் பரிசோதனைகளின் பட்டியல் மூன்று பரிசோதனைகளை உள்ளடக்கியுள்ளது. உங்களின் மருத்துவ நிலையை உறுதிப்படுத்த மூன்று பரிசோதனையின் முடிவுகளும் தெரிந்திருக்க வேண்டும். பரிசோதனையின் முடிவுகளைப் பற்றிய பொதுவான விளக்கத்துடன் கீழே ஒரு விளக்கப்படம் கொடுக்கப்பட்டுள்ளது, ஆனால் பரிசோதனையில் அசாதாரண முடிவுகளும் வரக்கூடும்.**

தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்: இந்த விளக்கப்படம் மருத்துவ ஆலோசனை தரக்கூடியது அல்ல. முழுமையான விளக்கத்திற்கு உங்கள் சுகாதார வழங்குநரிடம் கலந்துரையாடுங்கள் மேலும் உங்கள் பரிசோதனை முடிவுகளின் அச்சிடப்பட்ட நகலையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

| **HBsAg**<br>ஹெபடைடிஸ் B மேற்பரப்பு ஆன்டிஜென் பரிசோதனை | **anti-HBs**<br>(HBsAb)<br>ஹெபடைடிஸ் B மேற்பரப்பு ஆன்டிபாடி பரிசோதனை | **anti-HBc**<br>(HBcAb)<br>ஹெபடைடிஸ் B கோர் ஆன்டிபாடி பரிசோதனை | **பரிசோதனையின் முடிவுகள் எதைக் குறிக்கின்றன** | **நீங்கள் செய்ய வேண்டியவை** |
|---|---|---|---|---|
| − | − | − | **உங்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி இல்லை/பாதுகாக்கப்படவில்லை**<br>• நீங்கள் நோய்த்தொற்றுக்கு ஆளாகவில்லை மேலும் கடந்த காலத்தில் நோய்த்தொற்றினால் பாதிப்படையவில்லை.<br>• உங்களுக்கு ஹெபடைடிஸ் B தொற்று ஏற்படுவதற்கான ஆபத்து அதிகம் உள்ளது. | **தடுப்பூசி தேவைப்படுகிறது** |
| − | + | − | **உங்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது/பாதுகாக்கப்பட்டுள்ளீர்கள்**<br>• நீங்கள் நோய்த்தொற்றுக்கு ஆளாகவில்லை.<br>• ஹெபடைடிஸ் B தடுப்பூசி செலுத்திக் கொண்டதன் காரணமாக உங்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது. | **தடுப்பூசி தேவையில்லை** |
| − | + | + | **இயற்கையாக தொற்றுப் பெற்றதன் மூலம் நீங்கள் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெற்றுள்ளீர்கள்**<br>• முந்தைய ஹெபடைடிஸ் B நோய்த்தொற்றிலிருந்து நீங்கள் குணமடைந்து உள்ளீர்கள்.<br>• உங்களால் மற்றவர்களுக்குத் தொற்று ஏற்படாது. | **தடுப்பூசி தேவையில்லை**<br>• உங்கள் ஹெபடைடிஸ் B இன் பரிசோதனை முடிவுகளைப் பற்றி உங்கள் மருத்துவர்கள் அனைவரிடமும் கூறுங்கள்.<br>• நோயெதிர்ப்புத் தடுப்பு மருந்துகளை உட்கொள்வதற்கு முன் உங்கள் மருத்துவரிடம் கலந்தாலோசியுங்கள், ஏனெனில் அவை ஹெபடைடிஸ் B தொற்று மீண்டும் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கும். |
| + | − | + | **நீங்கள் தொற்றுக்குள்ளாகியிருக்கிறீர்கள்**<br>• உங்கள் இரத்தத்தில் ஹெபடைடிஸ் B வைரஸ் உள்ளது.<br>• நீங்கள் ஹெபடைடிஸ் B வைரஸை மற்றவர்களுக்குப் பரப்பக்கூடும். | **உங்களுக்கு கூடுதல் பரிசோதனைகள் தேவையா?**<br>• கூடுதல் மதிப்பாய்வு மற்றும் பரிசோதனைகள் செய்ய ஒரு மருத்துவரைக் கண்டறியவும்.<br>• உங்கள் ஹெபடைடிஸ் B இன் பரிசோதனை முடிவுகளைப் பற்றி உங்கள் மருத்துவர்கள் அனைவரிடமும் கூறுங்கள்.<br>• உங்கள் துணை மற்றும் உங்களுடன் வசிப்பவர்கள் பரிசோதனை செய்துகொள்வதையும் மற்றும் தடுப்பூசி செலுத்திக் கொள்வதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். |
| − | − | + | **நீங்கள் தொற்றுக்குள்ளாகலாம்**<br>• பரிசோதனையின் முடிவு தெளிவாக இல்லை - சாத்தியமான கடந்த கால அல்லது தற்போதைய ஹெபடைடிஸ் B தொற்று. | **உங்களுக்கு கூடுதல் பரிசோதனைகள் தேவைப்படுகிறது**<br>• கூடுதல் மதிப்பாய்வு மற்றும் பரிசோதனைகள் செய்ய ஒரு மருத்துவரைக் கண்டறியவும்.<br>• உங்கள் ஹெபடைடிஸ் B இன் பரிசோதனை முடிவுகளைப் பற்றி உங்கள் மருத்துவர்கள் அனைவரிடமும் கூறுங்கள்.<br>• நோயெதிர்ப்புத் தடுப்பு மருந்துகளை உட்கொள்வதற்கு முன் உங்கள் மருத்துவரிடம் கலந்தாலோசியுங்கள், ஏனெனில் அவை ஹெபடைடிஸ் B தொற்று மீண்டும் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கும்.<br>• உங்கள் துணை மற்றும் உங்களுடன் வசிப்பவர்கள் பரிசோதனை செய்துகொள்வதையும் மற்றும் தடுப்பூசி செலுத்திக் கொள்வதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். |

Hep B Hub

doh.wa.gov/hepbhub

Washington State Department of Health

*இந்த அட்டவணையில் உள்ள தகவல்கள் தீவிரமான (அல்லது புதிதாக தொற்றுப்பெற்ற) ஹெபடைடிஸ் B உள்ளவர்களுக்குப் பொருந்தாது.

DOH 420-434 October 2022 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள்திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov. என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும். ஆதாரம்: Hepatitis B Foundation https://www.hepb.org